**2026 ஆம் ஆண்டு மார்ச் 07–ம்** தேதி கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கூடலூர், நீலகிரி மாவட்டம். **அசல் வழக்கு எண்.7/2012** 1973ஆம் ஆண்டு ஆணையுறுதி ஆவணச் சட்டம் 10–வது விதியின் படி திருமதி. A. மகேஸ்வரி தலைமை எழுத்தர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்பட்டது.

பெயர் : **திரு. கவிராஜ் ஜார்ஜ் (DW -1)** தாலூக்கா : ஊட்டி
தந்தை பெயர் : திரு.நாகராஜ் ஜார்ஜ் சமயம் : –
ஜாதி : – கிராமம் : நடுவட்டம்
தொழில் : – வயது : 52/2026

---

**07.03.2026**

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை :**

**1).** 1–ஆம் பிரதிவாதி தேவாலயத்தின் தலைவராக நான் இருக்கிறேன். 2–ஆம் பிரதிவாதியும் நான் தான். எங்களுடைய மேல் தலைவர் பிசப் ஆவார். பிசப் நியமனக்கடிதம் கொடுத்த பின்பு தான் நாங்கள் செயல்படமுடியும் என்று சொன்னால் சரிதான். நான் 1–ஆம் பிரதிவாதி தேவாலயத்தின் தலைவராகவும், 2–ஆம் பிரதிவாதியாகவும் நியமிக்கப்பட்ட கடிதத்தை என்னால் தாக்கல் செய்ய முடியும் என்று சொன்னால் சரிதான். நடுவட்டம் CSI தேவாலயத்தின் பேரிஸ் பிரிஸ்ட் நான் தான் என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்யமுடியும் என்று சொன்னால் சரிதான். நான் நிரந்தரமாக நடுவட்டத்தில் தங்கியிருக்கிறேன் என்று சொன்னால் சரிதான். 2014ஆம் ஆண்டு முதல் நான் பந்தலூர் CSI தேவாலய பேரிஸ் பிரிஸ்ட் ஆக நியமனம் செய்யப்பட்டு செயல்பட்டு வருகிறேன். பந்தலூர் CSI தேவாலயத்திற்கும் எனக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றும், நான் நடுவட்டம் CSI தேவாலயத்தில் பணியாற்றுவதற்கு மட்டும் தான் பணியமர்த்தப்பட்டுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

**2).** பந்தலூர் CSI தேவாலயத்தில் உள்ள குடியிருப்பில் 2024ஆம் ஆண்டு வரை நான் குடியிருந்தேன். தற்போது அதில் இணை ஆயர் குடியிருந்து வருகிறார். எனக்கு கோயம்புத்தூர் CSI Diocesan–ல் இருந்து சம்பளம் தருகிறார்கள் என்று சொன்னால் சரிதான். CSI டிரஸ்ட் அசோசியேசனுக்கும், CSI Diocesan–க்கும் எவ்வித தொடர்பும் இல்லை

MURUGESAN P
Digitally signed by MURUGESAN P
Date: 2026.03.07 17:03:47 +0530

என்று சொன்னால் சரிதான். தாவா சொத்தான சர்வே எண்.2287/8 நிலம் CSI டிரஸ்ட் அசோசியேசனுக்கு சொந்தமானது என்று சொன்னால் சரிதான். CSI டிரஸ்ட் அசோசியேசனுக்கு சொந்தமான நிலத்தை நிர்வாகம் செய்வதற்கு ஒரு கமிட்டி இருக்கிறது என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. அதுபற்றி CSI டிரஸ்ட் அசோசியேசனுக்கு தான் தெரியும். CSI டிரஸ்ட் அசோசியேசன் Bylaw–ல் சொத்து பராமரிப்பு கமிட்டி இருப்பதாக கூறப்பட்டிருக்கிறது என்று சொன்னால் அவ்வாறு கூறியிருந்தால் அது சரிதான். கமிட்டி தான் சொத்துக்களை நிர்வாகம் செய்கிறார்கள் என்று சொன்னால் சரிதான்.

**3).** பந்தலூர் CSI தேவாலயம் மொத்தம் 4.96 ஏக்கரில் அமைந்துள்ளது. அதனை சுற்றி சுற்றுச்சுவர் இருக்கிறது என்று சொன்னால் சரியல்ல. 2 பக்கத்தில் சுற்றுச்சுவர் இருக்கிறது. 2 பக்கத்தில் சுற்றுச்சுவர் இல்லை. தேவாலயத்திற்கு முன்பும், தேவாலயத்தின் வலது பக்கமும் சுற்றுச்சுவர் இருக்கிறது. மற்ற இரு புறத்தில் சுற்றுச்சுவர் இல்லை. முள் வேலி இருக்கிறது. மேற்படி மொத்த நிலத்தில் தேவாலயம், கல்லறை, தங்குமிடம் மற்றும் காலி இடம் இருக்கிறது. தேவாலயத்தின் எல்லையை ஒட்டி பேரி அக்ரோ நிலம் இருக்கிறது என்று சொன்னால் சரிதான். அரசு நிலமும் இருக்கிறது. பேரி அக்ரோ நிலத்தை ஒட்டி கல்லறையை பாதுகாக்க பகுதியாக சுற்றுச்சுவர் எழுப்பப்பட்டிருக்கிறது.

**4).** கூடலூர்–கள்ளிக்கோட்டை சாலையை ஒட்டி தேவாலயத்திற்கு வலது பக்கத்தில் 5 அடி அகலம், 200 மீட்டல் நீளம் உள்ள ஒரு சாலை செல்கிறது என்று சொன்னால் சரிதான். அந்த சாலை வாதி தமிழரசியின் வீட்டிற்கு முன்பு முடிகிறது என்று சொன்னால் சரியல்ல. மேற்படி சாலையை 6, 7 குடும்பத்தினர் பயன்படுத்தி வருகிறார்கள் என்று சொன்னால் சட்டவிரோதமாக பயன்படுத்தி வருகிறார்கள். சாலை தேவாலயத்திற்கு சொந்தமான இடத்தில் உள்ளது. தமிழரசி, மூசா, பாப்புட்டி, ரவிச்சந்திரன், கமலா தேவி, பரமசிவம், விஸ்வநாதன் ஆகியோரின் குடும்பம் சாலை முடியக்கூடிய இடத்தில் இருக்கிறது என்று சொன்னால் சரியல்ல. மேற்படி நபர்கள் தான் 6, 7 குடும்பத்தை சேர்ந்த நபர்கள் சட்டவிரோதமாக பாதையை பயன்படுத்தி வருகிறார்கள் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி நபர்களுக்கு மின் இணைப்பு கொடுக்கப்பட்டு

MURUGESAN P
Digitally signed by MURUGESAN P
Date: 2026.03.07 17:03:52 +0530

நெல்லியாளம் பஞ்சாயத்தில் இருந்து வரிவிதிப்பு விதிக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால் அதுகுறித்து எனக்கு தெரியாது.

**5).** நான் 2004ஆம் ஆண்டு முதன் முதலாக நீலகிரி மாவட்டத்தில் கொலக்கொம்பைகிராமத்தில்உள்ள தேவாலயத்தில் பணியமர்த்தப்பட்டேன். பந்தலூர் தேவாலயம் உத்தேசமாக 1984ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது என்று நினைக்கிறேன். துல்லியமான ஆண்டு என்ன என்று தற்போது எனக்கு நினைவில் இல்லை. R.S.No.2287/2 அரசு நிலம் என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. வாதி 1950ஆம் ஆண்டு முதல் வீடு கட்டி குடியிருந்து வருகிறார் என்று சொன்னால், அதுபற்றி எனக்கு தெரியாது. புல எண்.2287/8 நிலம் யாரிடமிருந்து எந்த தேதியில் கிரயம் பெறப்பட்டது என்று கேட்டால், ஆவண எண்.2756/1958 மூலம் பெறப்பட்டதாகும். பி.வா.சா.ஆ.24 ஆவணம் கிரய ஆவணம் அல்ல என்று சொன்னால் சரியல்ல. அது உரிமை மாற்று ஆவணம் ஆகும். பி.வா.சா.ஆ.24–க்கு முன்பு உள்ள ஆவணம் என்னவென்று எனக்கு தெரியாது.

**6).** தேவாலயத்தின் 4.96 ஏக்கர் நிலத்தின் நான்கு எல்லைகள் கிழக்கு, வடக்கு, மேற்கு வயல் நிலமாகும். தெற்கு கூடலூர்–கள்ளிக்கோட்டை ரோடு ஆகும். நான் கூறிய நான்கு எல்லைகள் தாவா சொத்திற்கு தொடர்புடையது அல்ல என்று சொன்னால் தேவாலய சொத்தின் நான்கு எல்லையை நான் கூறியிருக்கிறேன்.தேவாலயத்தின் சொத்துக்களை யாரிடமிருந்து வாங்கினோம் என்று குறிப்பிட்டு எதிர்வழக்குரை மற்றும் முதல் விசாரணை சாட்சியத்தில் சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. எங்களுக்கு வட்டாட்சியர் பட்டா கொடுத்திருக்கிறார். பேரி அக்ரோ நிறுவனத்தினர் அவர்களது நிலத்தில் அத்துமீறி வாதி நுழைந்திருப்பதாக கூறி இந்நீதிமன்றத்தில் அ.வ.எண்.36/1980 தாக்கல் செய்தார் என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. அதில் வாதிக்கு ஆதாரவாக தீர்ப்பு பிறப்பிக்கப்பட்டது என்றும், அதனை எதிர்த்து போரி அக்ரோ நிறுவனத்தினர் மாண்புமிகு மாவட்ட நீதிமன்றத்தில் A.S.No.15/1987 தாக்கல் செய்தார்கள் என்றும், அது அனுமதிக்கப்பட்டது என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. பின்பு பேரி அக்ரோ நிறுவனத்தினர் நிறைவேற்றுதல் மனு.86/1996

MURUGESAN P
Digitally signed by MURUGESAN P
Date: 2026.03.07 17:03:56 +0530

தாக்கல் செய்ததில் பேரி அக்ரோ நிறுவனத்திற்கும் வாதிக்கும் இடையே சமரசம் ஏற்பட்டு, வாதி அனுபோகத்தில் இருந்த 30 செண்ட் பூமியை வாதிக்கு ஒதுக்கப்பட்டது என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது.

**7).** வாதியின் கணவர் அ.வ.எண்.66/1989 தாக்கல் செய்தார் என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. அ.வ.எண்.66/1989 வழக்கில் ஆணையர் நியமனம் செய்யப்பட்டு, ஆணையர் 30 செண்ட் நிலத்தில் வாதி வீடு கட்டி, குடியிருந்து வருவதாக கூறியிருக்கிறார் என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. வாதி குடியிருக்கும் 30 செண்ட் நிலத்தின் பழைய சர்வே எண்.521 என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. எங்களுடைய மொத்த நிலத்திற்கும் தள்ளி 200 மீட்டர் தொலையில் வாதியின் நிலம் இருக்கிறது என்றும், வாதியை நான் தொந்தரவு செய்ததால் வாதி இவ்வழக்கை தாக்கல் செய்திருக்கிறார் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்திற்கும், எங்களுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்று சொன்னால் சரிதான். அதனால், வாதிக்கு வழக்குரையில் கோரியுள்ளபடி பரிகாரம் கிடைக்கக்கூடியது என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

MURUGESAN P

Digitally signed by MURUGESAN P
Date: 2026.03.07 17:03:59 +0530